மே – 15

# TNPSC துளிகள்

- தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் (NALSA) நிர்வாகத் தலைவராக உச்ச நீதிமன்ற நீதிபதி சூர்யா காந்தினை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பரிந்துரைத்துள்ளார்.
- சர்வம் எனப்படும் செயற்கை நுண்ணறிவு சார் இந்தியப் புத்தொழில் நிறுவனமானது, சுமார் 11 இந்திய மொழிகளில் சேவை வழங்கும் உரையினை வாய்மொழியாக மொழி பெயர்க்கும் (TTS) புல்புல்-V2 என்ற அதன் சமீபத்திய செயற்கை நுண்ணறிவு மாதிரியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் வில்வித்தை வீராங்கனை தீபிகா குமாரி சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்ற வில்வித்தை உலகக் கோப்பைப் போட்டியின் இரண்டாவது நிலையில் வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- புது டெல்லியில் உள்ள ராணுவ ஆராய்ச்சி மற்றும் தொழில்முறை ஆதரவு வழங்கீட்டு மருத்துவமனையின் கண் சிகிச்சை மருத்துவத் துறையானது, கிளாக்கோமா (கண் நீர் அழுத்த நோய்) பாதிப்பிற்கான குறைந்தபட்ச ஊடுருவும் அறுவைச் சிகிச்சைக்கான முப்பரிமாண நுண்ணோக்கியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஜெர்மனி நாட்டின் கெஹ்ல் மற்றும் பிராங்பேர்ட் இடையே அமைந்துள்ள வழக்கமான தொலைத்தொடர்பு வலையமைப்பில் 250 கிலோமீட்டர் தூரத்திற்கு குவாண்டம் வடிவ செய்திகளை ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாக கடத்தியுள்ளனர்.
- தாலிபான் அரசாங்கமானது, இஸ்லாமியச் சட்டத்தின் கீழ் சட்டவிரோதமாக கருதப் படும் சூதாட்டத்துடன் சதுரங்க விளையாட்டு இணைக்கப் படலாம் என்ற ஒரு பெரும் அச்சுறுத்தலைக் காரணம் காட்டி, ஆப்கானிஸ்தானில் சதுரங்க விளையாட்டிற்கு மறு அறிவிப்பு வரும் வரை தடை அறிவித்துள்ளது.
- இலங்கை நாட்டின் கொழும்புவில் நடைபெற்ற பிராந்திய ஒருங்கிணைந்த பல்-இடர் முன்னெச்சரிக்கை அமைப்பின் (RIMES) 4வது அமைச்சர்கள் மாநாட்டிற்கு இந்தியா இணைத் தலைமைப் பொறுப்பினை வகித்தது.
    - பேரிடர் தயார்நிலையில் பிராந்திய ஒத்துழைப்பை மிகவும் நன்கு வலுப்படுத்தும் பிரகடனத்தினை இந்த நிகழ்வானது ஒரு மனதாக ஏற்றுள்ளது.


# தேசியச் செய்திகள்

## சமூக ஊடக தளங்களுக்கான பாதுகாப்பு விதிகள்

- இயங்கலையில் "போலிச் செய்திகள்" பரவுதல் குறித்த ஒரு பிரச்சினையை எதிர்த்துப் போராடுவதற்காக என்ற சமூக ஊடகத் தளங்களுக்கான பாதுகாப்பு விதிகள் என்ற கருத்தை மத்திய அரசு மறுபரிசீலனை செய்து வருகிறது.
- பாதுகாப்பு விதிகள் என்பது மூன்றாம் தரப்பு பயனர்கள் எந்தவொருச் சட்டவிரோத உள்ளீடுகளையும் பதிவிட அனுமதிக்கும் தனிப்பட்ட வலைதளங்களைச் சட்டப்பூர்வ நடவடிக்கைகளிலிருந்துப் பாதுகாக்கும் ஒரு சட்டப் பூர்வப் பாதுகாப்பு விதிமுறை ஆகும்.
- இப்பாதுகாப்பு விதிகள் ஆனது அந்தத் தளங்களை, அவற்றில் வேறொருவரால் இடப் பட்ட பதிவுகளுக்கான எந்தவொரு குற்றவியல் நடவடிக்கையிலிருந்தும் இயல்பாகவே பாதுகாக்கிறது.
- 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 79வது பிரிவானது, இடை நிலை


அமைப்புகளுக்கும் இதே போன்ற பாதுகாப்புகளை வழங்குகிறது.

- இந்தியாவில், இடைநிலை நிறுவனங்கள் தங்கள் வலைதளத்தில் சட்ட விரோதமான உள்ளடக்கம் குறித்த "ஒரு உண்மையானத் தகவலை" பெற்றால், ஒரு குறிப்பிட்டக் காலத்திற்குள் உள்ளடக்கத்தினை அகற்றுவதற்கு அவை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், 79வது பிரிவின் கீழ் சட்டப்பூர்வப் பொறுப்பேற்பிலிருந்துப் பாதுகாப்பினை இழக்கும்.




# சர்வதேசச் செய்திகள்

## பாகிஸ்தான் நாட்டிற்கு விரிவாக்க நிதி உதவி (EFF)




- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிர்வாகக் குழுவானது, பாகிஸ்தான் நாட்டிற்கு 1 பில்லியன் டாலர்கள் (சுமார் 8,500 கோடி ரூபாய்) மதிப்பிலான நிதியை "உடனடியாக வழங்குவதற்கு" அனுமதிக்க முடிவு செய்துள்ளது.
- பாகிஸ்தான் நாட்டிற்கு IMF நிதியத்தினால் வழங்கப்படும் விரிவாக்க நிதி உதவியின் (EFF) ஒரு பகுதியாக இந்த நிதி வழங்கல் மேற்கொள்ளப்பட்டது.
- உலகின் பிற பகுதிகளுக்கு இறக்குமதி செய்யும் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கான தொகைகளை செலுத்தப் போதுமான பணம் இல்லாத நாடுகளுக்கு EFF வசதியின் கீழ் IMF உதவி வழங்குகிறது.
- பாகிஸ்தான் நாட்டின் ஒட்டு மொத்த மொத்த உள்நாட்டு உற்பத்தியானது கடந்த பத்தாண்டுகளில் தேக்க நிலையில் உள்ளது அதாவது, 2023 ஆம் ஆண்டில் சுமார் 338 பில்லியன் டாலர்களாக இருந்த அதன் மதிப்பானது 2017 ஆம் ஆண்டில் இருந்ததை விட

குறைவாகும்.

- IMF நிர்வாகக் குழுவின் கூட்டத்தில் இந்தியா வாக்களிப்பதைத் தவிர்த்த நிகழ்வு, IMF நெறிமுறையின் வரம்புகளுக்குள் அதன் எதிர்ப்பைப் பிரதிபலிக்கிறது.
- ஐக்கிய நாடுகள் சபையைப் போலல்லாமல், IMF வாரியத்தின் உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக மட்டுமே வாக்களிக்க முடியும் அல்லது வாக்களிப்பதைத் தவிர்க்க முடியும் என்ற நிலையில் அதிகாரப் பூர்வமாக அதனை எதிர்த்து வாக்களிப்பதற்கு எந்த வழிமுறையும் இல்லை.

## பலுசிஸ்தான் சுதந்திரப் பிரகடனம்





- பலுசிஸ்தான் விடுதலைப் படையானது (BLA), பலுசிஸ்தானின் கலாட் மாவட்டத்தில் உள்ள மங்கோச்சர் நகரத்தின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றியதாக அறிவித்துள்ளது.
- அது பலுசிஸ்தான் பகுதியின் சுதந்திரத்தினைக் கோரி, பலுசிஸ்தான் ஜனநாயகக் குடியரசை அங்கீகரிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையைக் கோரியுள்ளது.
- நாணயம் மற்றும் கடவுச்சீட்டுகளை அச்சிடுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையிடமிருந்து நிதியை வழங்க வேண்டும் என்று அப்பிரிவு கோரியது.
- பலுசிஸ்தான் ஆனது, அந்த நாட்டின் பரப்பளவில் மிகப்பெரியப் பங்கினைக் கொண்டு உள்ள (பாகிஸ்தானின் பிரதேசத்தில் ~44%) பாகிஸ்தானின் தென்மேற்கு மாகாணம் ஆகும்.
- இது ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தானின் எல்லையாகக் கொண்டு அரபிக் கடலின் ஓரத்தில் அமைந்துள்ளது .

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## LICONN தொழில்நுட்பம்


- ஆஸ்திரியாவின் அறிவியலாளர்கள், ஒளி நுண்ணோக்கி அடிப்படையிலான நியூரான் இணைப்பு குறித்த ஆய்வுக் கருவி (LICONN) என்ற புதிய நுண்ணோக்கி முறையினை உருவாக்கியுள்ளனர்.
- நியூரான்களுக்கு இடையிலான அனைத்து நரம்பிணைப்புகளுடன் இது மூளையின் திசுக்களைப் படமாக மறுகட்டமைக்கும் திறன் கொண்டது.
- இது சாதாரண ஒளி சார் நுண்ணோக்கிகள் கண்டறியக் கூடியதை விட சிறியதாக

உள்ள மூளையில் உள்ள கட்டமைப்புகளை காண்பதற்கு ஆராய்ச்சியாளர்களுக்கு வழி வகுக்கிறது.




3D-rendering and magnified views of a dendrite (segmented with flood filling networks) and excitatory synaptic connections (white bars) detected via immunolabeling.

## சந்திரயான்-3 நிலவினுடைய மூடகத்தின் மாதிரிகள்





- புதியக் கண்டுபிடிப்புகளானது, சந்திரயான்-3 ஆய்வுப் பயணத்தின் தரையிறங்கும் தளமான சிவ சக்தி மையம்/புள்ளி ஆனது நிலவின் பழமையான மூடக மாதிரிகளை எடுப்பதற்கான ஒரு நம்பிக்கைக்குரிய தளம் என்பதை வெளிப்படுத்தியுள்ளன.
- சிவ சக்தி மையமானது, புவியிலிருந்து புலனாகும் வகையில் நிலவின் பக்கத்திற்கு அருகில் உள்ள தெற்கு உயர் அட்சரேகைப் பகுதிகளில் அமைந்துள்ளது.
- தரையிறங்கும் தளத்தில் சோடியம் மற்றும் பொட்டாசியம் ஆகியவை ஒரு குறைவான அளவில் உள்ள நிலையானது, தென் துருவ-ஐட்கன் படுகை உருவான ஒரு இடம் மற்றும் அது உருவான காலக் கட்டத்தில் பொட்டாசியம், அருமண் தனிமக் கூறுகள் மற்றும் பாஸ்பரஸ் போன்றவை (KREEP) இருந்திருக்காது என்பதைக் குறிக்கிறது.

## நேரடித் தொடர்பற்ற அணியக் கூடிய சாதனம்

- அமெரிக்கா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் உடலுடன் நேரடியான தொடர்பு இல்லாமல் கூறுகளினுடைய தோல் வழிப் பாய்வை அளவிடுவதன் மூலம் ஆரோக்கியத்தை நன்கு கண்காணிக்கக் கூடிய ஒரு புதியதான தொடர்பற்ற அணியக் கூடியச் சாதனத்தினை உருவாக்கியுள்ளனர்.
- இந்தச் சாதனத்தினை உடலில் எங்கு வேண்டுமானாலும் பொருத்திக் கொண்டு /

அணிந்து வெளிப்புறப் பாய்வையும் உள்நோக்கியப் பாய்வையும் கண்காணிக்கலாம்.

- அவை உண்மையில் தோலுடன் தொடர்பற்று இருந்தாலும், இருதய இரத்த சுழற்சிகள், நுரையீரல் செயல்பாடு போன்ற அடிப்படை உடலியல் செயல்முறைகளை நேரடியாக அளவிடுகிறது.
- இதன் மூலம் தோல் வழியாக மனித உடலில் நுழையும் மிகவும் அபாயகரமான சில இரசாயனங்களையும் கண்காணிக்க முடியும்.




## ஆங்ஸ்ட்ரோம் அளவிலான குறைக்கடத்தி





- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் அறிவியல் ஆய்வாளர்கள், 'ஆங்ஸ்ட்ரோம்-அளவிலான' சில்லுகளை உருவாக்குவதற்கு என அரசாங்கத்திடம் ஒரு முன்மொழிவினை சமர்ப்பித்துள்ளனர்.
- தற்போது உற்பத்தியில் உள்ள மிகச்சிறிய சில்லுகளை விட இது மிகவும் சிறியதாகும்.
- இரு பரிமாண (2D) பொருட்கள் எனப்படும் புதிய வகை குறைக்கடத்தி பொருட்களைப் பயன்படுத்தி தொழில்நுட்பக் கூறுகளை உருவாக்குவதற்கான ஒரு முன்மொழிவினை அரசாங்கத்திற்கு வழங்கியது.
- தற்போது, குறைக்கடத்தி உற்பத்தியில் அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா மற்றும் தைவான் போன்ற மேம்படுத்தப் பட்ட நாடுகள் முன்னிலை வகிக்கும் சிலிக்கான் அடிப்படையிலான தொழில்நுட்பங்கள் முன்னிலை பெற்றுள்ளன.

- தற்போது உற்பத்தியில் உள்ள மிகச்சிறிய சில்லு சாம்சங் மற்றும் மீடியா டெக் போன்ற நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டு வரும் 3-நானோமீட்டர் முனையம் ஆகும்.

# மாநிலச் செய்திகள்

## உருமாற்ற மலை முகடுகள்

- உச்ச நீதிமன்றம் ஆனது M C மேத்தா மற்றும் இந்திய ஒன்றியம் வழக்கில், 1996 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அதன் உத்தரவின் மீறல்கள் தொடர்பான காரணம் கேட்புக் குறிப்பாணைகளை வெளியிட்டுள்ளது.
- 1996 ஆம் ஆண்டு உத்தரவானது, நீதிமன்றத்தின் முன் ஒப்புதல் இல்லாமல் மலை முகட்டு நிலம் ஆனது ஆக்கிரமிப்பு மற்றும் வனம் சாராதப் பயன்பாட்டிலிருந்துப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறியது.
- டெல்லி முகட்டுப் பகுதியானது, அந்த நகரின் பண்டைய ஆரவல்லி மலைத்தொடரின் கடைநிலை முனை மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த மண்டலம் ஆகும்.
- இது இந்தத் தலைநகரின் ஒரு பசுமை நுரையீரலாகவும் (இயற்கைப் பகுதி), பாலைவன மாக்கல் மற்றும் மாசுபாடு போன்ற ஆபத்துகளிலிருந்து இப்பகுதியைக் காக்கும் ஓர் இயற்கை அரணாகவும் செயல்படுகிறது.
- மஹிபால்பூரின் தெற்கிலிருந்து துக்ளகாபாத்தின் தென்கிழக்கே சுமார் 35 கி.மீ. வரை நீண்டுள்ள இந்த மலைமுகட்டு நிலமானது, யமுனை நதியின் மேற்குக் கரையில் உள்ள வஜிராபாத் வரை பரவிக் காணப் படுகிறது.





## 'விருத்தி' பிரச்சாரம் - கேரளா

- 'Vruthi 2025: The Clean Kerala Conclave' என்ற தலைப்பிலான ஐந்து நாட்கள் அளவிலான ஒரு மாநாடானது சமீபத்தில் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது.
- மாநிலத்தின் கழிவுச் சேகரிப்பு பரவல் எல்லையானது ஓராண்டில் 40 சதவீதத்திலிருந்து 75% வீடுகளாக அதிகரித்தது.

- கேரள மாநிலம் 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 'விருத்தி' பிரச்சாரத்தைத் தொடங்கியது.
- மாபெரும் பொதுமக்கள் பங்கேற்பு மற்றும் பரவலாக்கப்பட்ட பல்வேறு தீர்வுகள் மூலம் அதிகரித்து வரும் கழிவு மேலாண்மை நெருக்கடியை எதிர்த்துப் போராடுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.




## தபதி நதிப் படுகை திட்டம்





- மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய இரு மாநில அரசுகள் ஆனது தபதி நதிப் படுகையின் மாபெரும் நீர்மட்ட மீட்சித் திட்டத்தினை இணைந்து செயல்படுத்தச் செய்வதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த ஒப்பந்தம் ஆனது இரு மாநிலங்களிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளின் நீர்த் தேவைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- இத்திட்டமானது, கடந்த ஆண்டில் மத்தியப் பிரதேச அரசு மேற்கொண்ட இத்தகைய மூன்றாவது முன்னெடுப்பாகும்.
- ஏற்கனவே உத்தரப் பிரதேச மாநிலத்துடன் கென்-பெட்வா நதிநீர் இணைப்பு மற்றும்

இராஜஸ்தானுடன் பார்வதி-காளிசிந்த்-சம்பல் நதிநீர் இணைப்புத் திட்டம் என அதற்கு 2 திட்டங்கள் உள்ளன.

### PMFME திட்டம் 2024-25

- மத்திய அரசின் நிதியுதவியினைப் பெறும் பிரதான் மந்திரி உணவுப் பதப்படுத்தும் குறு நிறுவனங்கள் உருவாக்க (PMFME) திட்டமானது 2020-21 ஆம் ஆண்டு முதல் நம் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- 2024-25 ஆம் நிதியாண்டில் இந்தத் திட்டத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் பீகார் முன்னணியில் உள்ளது.
- PMFME திட்டம் ஆனது தனிப்பட்ட மற்றும் குழுமங்களுக்கான மானியங்களுடன் கூடிய கடன்களை வழங்குகிறது.
- தனிப்பட்ட குறு உணவுப் பதப்படுத்தும் இந்த நிறுவனங்கள் ஆனது அதற்கான திட்டச் செலவினத்தில் 35% மானியத்தினை, அதாவது அதிகபட்சமாக 10 லட்சம் ரூபாய் வரை மானியம் பெறலாம்.
- சுமார் 10,296 விண்ணப்பங்களில், சுமார் 6,589 அங்கீகரிக்கப்பட்டு அதற்குக் கடன்கள் வழங்கப் பட்டன என்ற நிலையில் இது மொத்தக் கடன் வழங்கீட்டில் 63% பங்கினைக் குறிக்கிறது.




## முக்கிய தினங்கள்

### சர்வதேச தாவர ஆரோக்கிய தினம் 2025 - மே 12

- தாவர வளத்தினை/ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது பட்டினி நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், வறுமையைக் குறைப்பதற்கும், பல்லுயிர்ப்பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும், பொருளாதார வளர்ச்சியை அதிகரிப்பதற்கும் எவ்வாறு உதவும் என்பது குறித்த ஒரு உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும்.
- உலகளாவிய உணவுப் பயிர்களில் சுமார் 40% ஆனது ஆண்டுதோறும் தாவரப் பூச்சிகள் மற்றும் நோய்களால் இழக்கப்படுகின்றன.

- ஒவ்வோர் ஆண்டும் தாவர நோய்களால் சுமார் 220 பில்லியன் டாலருக்கும் அதிகமான தொகையும், ஊடுருவும் அயல் இனப் பூச்சிகளால் சுமார் 70 பில்லியன் டாலருக்கும் அதிகமான தொகையும் இழக்கப்படுகின்றது.
- இந்தத் தினமானது சர்வதேச தாவர ஆரோக்கிய ஆண்டாக அறிவிக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டின் முக்கிய மரபாகும்.




## ஐநா சபையின் 8வது உலகளாவிய சாலைப் பாதுகாப்பு வாரம் 2025 - மே 12/18

- பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு மிகவும் பாதுகாப்பான நகர்ப்புற உள்கட்டமைப்பை உருவாக்குவதை ஊக்குவிப்பதையும், சாலைப் போக்குவரத்தின் போது ஏற்படும் காயங்கள் மற்றும் உயிரிழப்புகளைக் குறைப்பதற்கான நிரூபிக்கப் பட்ட நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கான அழைப்பினை விடுப்பதையும் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலகளவில் பதிவாகும் 4 உயிரிழப்புகளில் ஒன்றுக்கும் மேற்பட்டவை இப்பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டுபவர்களிடையே நிகழ்கின்றன.
- இதன் மூலம் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1.2 மில்லியன் மக்கள் கொல்லப்படுகின்றனர் மற்றும் 50 மில்லியன் மக்கள் காயமடைகின்றனர்.




## சர்வதேச குடும்ப தினம் 2025 - மே 15

- இந்தத் தினமானது உலகளவில் குடும்பங்களின் பெரும் முக்கியத்துவத்தையும் சமூக வளர்ச்சியில் அவற்றின் பங்கையும் எடுத்துக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- சமூக மேம்பாட்டிற்கான உலக உச்சி மாநாட்டின் 1995 ஆம் ஆண்டு கோபன்ஹேகன் பிரகடனம் ஆனது குடும்பத்தினைச் சமூகத்தின் அடிப்படை அலகாக அங்கீகரித்தது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Family-Oriented Policies for Sustainable Development: Towards the Second World Summit for Social Development" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★